**செ. கு. எண்**: 249 **நாள்**: 11.07.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை - 11.7.2012

சென்னை மாவட்டம், புரசைவாக்கம் - பெரம்பூர் வட்டம், நரசிம்மன் நகர் 2வது தெருவைச் சேர்ந்த திரு.வேல்முருகன் என்பவரின் மகன் செல்வன்.நிரஞ்சன் பள்ளிக்கு சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது, பெரம்பூர் டிப்போ சென்று கொண்டிருந்த மாநகரப் பேருந்து மோதியதில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த சாலை விபத்தில் அகால மரணமடைந்த செல்வன்.நிரஞ்சன் குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இந்தத் துயரச் சம்பவத்தில் காலமான செல்வன். நிரஞ்சன் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**